ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாரணமங்கலம் கிராம ஊராட்சி
கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. ச.பத்மாவதி

தீர்மான எண். 391/2024 நாள் : 26.07.2024

பொருள் – மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் – ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் நாரணமங்கலம் ஊராட்சி நாரணமங்கலம் வருவாய் கிராமம் நாரயணமங்கலம் கிராமத்தில் கிராம புல எண். UDR பகு 333/2 ல்மேலும் 60.74 சார்பு ஏக்கர் 1.50 செண்ட் 6070.17 சதுர அடி பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மொத்த மனை 29-இல் அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல்.

பார்வை –

1. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017.
2. அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017.
3. அரசாணை எண்.55 வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018.
4. அரசாணை எண். 21 வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 05.02.2019.
5. உதவி இயக்குநர், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை, பெரம்பலூர் மண்டலம், பெரம்பலூர்--இன் கடிதம் ந.க.எண்._____ /____ / பெ.மா. நாள்:

*****

உத்தரவு:

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாரணமங்கலம் ஊராட்சி, நாரணமங்கலம் வருவாய் கிராமம், நாரணமங்கலம் கிராமத்தில் புல எண்(கள்) UDR பகு 333/2 -இல் 1.50 ஏக்கர் (அ) 6070.17 ச.மீ. பரப்பளவு கொண்ட நிலப்பகுதி புன்செய் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலப்பகுதியை 29 எண்ணிக்கையிலான மனைகளாக (Plots) பிரித்து அனுகிரஹா என பெயரிட்ட மனைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு தொடர்பான அடிப்படை விபரங்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

... 2

01.	மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு சதுர மீட்டரில்	:	6070.17 சமீ
02.	மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட காலிமனைகளின் மொத்தப்பரப்பு சதுர மீட்டரில்	:	4633.89 சமீ
03.	வரிசை எண்.1–இல் குறிப்பிட்டுள்ள நிலப் பகுதி எத்தனை மனைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன	:	29 மனைகள்
04.	விற்கப்பட்ட மனைகள் எண்ணிக்கை	:	ஏதும் இல்லை
05.	விற்கப்படாத மனைகள் எண்ணிக்கை	:	29 மனைகள்
06.	துணை இயக்குநர் அவர்கள் நகர் ஊரமைப்பு அலுவலகம் பெரம்பலூர் மாவட்டம் அங்கீகாரம் செய்த நாள் மற்றும் எண்.	:	35/2023
07.	தற்போது அங்கீகாரம் கோரும் மனைகள்	:	29 மனைகள்
08.	TANGEDCO(A) ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி (சதுர மீட்டரில்)	:	42.30 சமீ
09.	சாலை வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி (சதுர மீட்டரில்)	:	1436.28 சமீ
10.	பொது உபயோகத்திற்காக ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி பரப்பு (சதுர மீட்டரில் (B))	:	40.90 சமீ
11	மனைப்பிரிவின் மொத்த நிலப்பகுதியில் 10% ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? இல்லை பணமாக செலுத்தப்பட்டுள்ளதா?	:	பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

01. தற்போது கிராம ஊராட்சி தலைவரால் அளிக்கப்படும் அங்கீகாரம் பெரம்பலூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் பார்வை 1–இல் கண்ட செ.மு.ல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை அனுசரித்தே வழங்கப்படுகிறது.

02. இந்த அளிக்கப்படும் அங்கீகாரம் பார்வை–1ல் காணும் செயல்முறை உடன் இணைத்து பெறப்பட்ட வரைபடத்தின் அடிப்படையிலும், அரசாணை எண்.79 நகர் மற்றும் ஊரமைப்புத்துறை நாள் 04.05.2017–ன் பத்தி எண்.4–ல் கண்டுள்ள வழிமுறைகளின் அடிப்படையிலும் வழங்கப்படுகிறது.

03. தனித்தனி மனைப்பிரிவுகளில் வீடு கட்ட அனுமதி கோரும் நிகழ்வுகளின்போது மேற்கொள்ளப்படும் தள ஆய்வின்போதோ அல்லது இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளக்கூடிய தள ஆய்வுகளின்போதோ பத்தி எண்.4–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து வழுவற்றதாக இருப்பது கண்டறியப்பட்டால், தற்போது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

04. மேற்படியாக அங்கீகாரம் வழங்கப்பட்ட மனைகளின் உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதும் பின்னர் தெரிய வந்தால் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்ததாக கருதப்படும் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

05. ஊராட்சி பெயரில் தானமாக அளிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய ஆவணங்களைக் கொண்டு கிராம ஊராட்சியின் சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் பத்திரத்தின் நகல் ஒன்றும் கிராம ஊராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

தலைவர்
நாரணமங்கலம் ஊராட்சி,
பெரம்பலூர்.

பெறுநர்

நகல்
உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை,
பெரம்பலூர் மண்டலம்.

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாரணமங்கலம் கிராம ஊராட்சி
கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. ச.பத்மாவதி

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாரணமங்கலம் கிராம ஊராட்சி மன்ற சிறப்பு / அவசர கூட்டத்தின் நடவடிக்கையின்படி அனைத்து அங்கத்தினர்களின் ஒப்புதலோடு பொருள் 108 தீர்மான எண். 391 நாள் 26.07.2024 –ன்படி நாரணமங்கலம் கிராம புல எண். 333/2 பரப்பளவு கொண்ட அனுக்கிரஹா எனப் பெயரிடப்பட்ட புதிய மனைப்பிரிவில் 4633.89 பரப்பளவு கொண்ட 29 எண்ணிக்கை உள்ள மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
நாரணமங்கலம் ஊராட்சி,
பெரம்பலூர்.

தலைவர்
நாரணமங்கலம் ஊ.ம.சி.
பெரம்பலூர் Tk.,
பெரம்பலூர் Dist.